பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை 28.

**சுற்றறிக்கை**

எண்.7513/S1/2020 நாள்.25.2.2020

பொருள்: ஆவண எழுத்தர் / ஆவண எழுத்தர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் / குறித்து.

பார்வை:
1. பதிவுத்துறை தலைவர் ஆணை எண்.61349/இ1/06 நாள்.18.12.2006
2. பதிவுத்துறை தலைவர் கடித எண்.58779/இ1/09 நாள்.18.11.2009
3. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்.25-2/S2/2010 நாள்.21.06.2010
4. பதிவுத்துறை தலைவர் ஆணை எண்.61492/S1/10 நாள்.19.11.2010
5. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்.50584/S1/2013 நாள்.09.12.2013

***

பார்வையில் காணும் சுற்றறிக்கைகளின் வழி சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவண எழுத்தர்கள் மற்றும் நிலத்தரகர்களை அனுமதிக்கக் கூடாது எனவும், ஆவண எழுத்தர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் ஆவண எழுத்தர்கள் மீதான புகார்கள் தொடர்ந்து பதிவுத்துறை தலைவரின் கவனத்திற்கு வரப்பெற்ற வண்ணம் உள்ளது.

எனவே, பார்வையில் கண்ட சுற்றறிக்கைகளை தவறாது பின்பற்ற சார்நிலை அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் பார்வை 5ல் காணும் சுற்றறிக்கையில் ஆவண எழுத்தர்கள் கடைபிடிக்கவேண்டிய நெறிமுறைகளில் ஒன்றாக இரசீது புத்தகம் பராமரிக்கப்படவேண்டும் என்பது அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் பொதுமக்களுக்கு ஆவண எழுத்தர்களால் ஆவணம் தயாரிப்பதற்கான கட்டண இரசீது வழங்கப்படுவதில்லை என புகார்கள் வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து அனைத்து ஆவண எழுத்தர்களும் தங்களால் தயாரிக்கப்படும் ஆவணங்களுக்கான கட்டண இரசீதினை ஆவணதாரர்களுக்கு தவறாது வழங்க வேண்டும் என ஆவண எழுத்தர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேற்படி கட்டண இரசீதுடன் ஆவணம் தாக்கல் செய்யப்படுவதை பதிவு அலுவலர்கள் உறுதி செய்து ஆவணப் பதிவு மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் கட்டண இரசீதினை குறிப்பு ஆவணமாக (Reference Document) அந்தந்த ஆவணங்களுடன் ஒளிவருடல் செய்யவும், அலுவலக கோப்பில் கோர்த்து பராமரிக்கவும் சார்பதிவாளர்கள் கோரப்படுகிறார்கள். மேற்கண்ட நடைமுறை 01.03.2020 முதல் அமலுக்கு வருகிறது.

Verified RealEstate ™

இச்சுற்றறிக்கையின் வரவை தங்கள் மண்டலத்திற்குட்பட்ட பதிவு அலுவலர்களிடம் ஒப்புதல் பெற்று அவ்விவரத்தினை தெரிவிக்க துணைபதிவுத்துறை தலைவர்கள் கோரப்படுகிறார்கள். மேலும், அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் இச்சுற்றறிக்கை விவரத்தினை அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்திட அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/....25.02.2020
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

பதிவுத்துறை தலைவருக்காக.

பெறுநர்

அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள் (நிர்வாகம் மற்றும் தணிக்கை)
அனைத்து சார்பதிவாளர்கள்

நகல் : இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம்
பதிவுத்துறை அலுவலக அனைத்து உயர் அலுவலர்கள்
சி பிரிவு (தகவலுக்காக) /எஸ்1 முக்கிய ஆணைக்கோப்பு.
கணினி பிரிவு (பதிவுத்துறை வலைதளத்தில் பதிவேற்றம் செய்திட)

Verified RealEstate ™